பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 13 (30—10—71) சனி   வெளியூர்: ஐப்பசி 14 (31—10—71) ஞாயிறு [இதழ்: 114

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு ரூ. 15,000

மதுரை, அக். 30—

இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் பொன் விழா -- மத்தியக் கட்டடத் திறப்பு விழாவின்போது, வங்கியின் நிர்வாகிகள் -- அலுவலர்கள் -- இணைக்கப்பட்ட சங்கங்களின் சார்பில், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் ரூ. 15,000-த்துக்கான காசோலையை வழங்கினர்.

இருப்பதைப் பகிர்ந்துகொள்ளும் காகங்கள் ஆகாதீர்!

இல்லாதவர்கட்குப் பொழியும் மேகங்கள் ஆவீர்!

புனிதமான தத்துவம் வெற்றிபெற நாணயம் காப்பீர்

கூட்டுறவுத் துறை நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தல் -- முதல்வர் கலைஞர், அமைச்சர்கள் செ. மாதவன், சி. பா. ஆதித்தனார் உரைகள்

மதுரை, அக். 30—

"கூட்டுறவு என்பது ஒரு புனிதமான சொல்; புனிதமான தத்துவம்; ஆனால், அந்தப் புனிதமான சொல் -- புனிதமான தத்துவத்தைச் சில பேர் தங்களது நடவடிக்கைகளால், அந்தக் கூட்டுறவுத் துறையிலே காட்டவேண்டிய நாணயத்திலே இருந்து தவறிவிடுவதால் -- நேர்மையிலே இருந்து பிறழ்ந்து விடுவதால் — கூட்டுறவு என்கின்ற தத்துவத்திற்கே களங்கம் கற்பிக்கின்ற குற்றவாளிகளாக ஆகிவிடுகிறார்கள்!

"கூட்டுறவுத் துறையிலே யார் இருந்தாலும் சரி — அந்தக் கூட்டுறவுத் துறையை நிர்வகிக்கின்றவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி — தங்களுடைய நாணயத்தை நம்பி -- நேர்மையை நம்பி இவ்வளவு பெரிய பெரும் பொறுப்பு நம்முடைய கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்கின்ற அந்தத் தூய்மையான இதயத்தோடு பணியாற்ற வேண்டும்.

"மேகங்கள் கூடுவது மழை பொழிவதற்காக; காகங்கள் கூடுவது இருப்பதைப் பகிர்ந்து கொள்வதற்காக; கூட்டுறவு இயக்கத்திலுள்ளவர்களெல்லாம் மேகங்கள் கூடுவதைப்போல் கூடி, நல்ல மழையை ஏழை எளிய மக்களுக்குப் பொழிகின்ற இயக்கமாக அதை மாற்ற வேண்டும்! அதில்லாமல், காகங்களைப்போலக் கூடி — இருப்பதைப் பகிர்ந்து கொண்டார்களேயானால், கூட்டுறவு இயக்கத்திற்குப் பெரும் களங்கம் -- மாசுமறு ஏற்பட்டுவிடும்!"

என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் பொன் விழா — புதிய கட்டடத் திறப்புவிழாவில் உரையாற்றுகையில், தெள்ளத் தெளிவுச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

விழாவில், கூட்டுறவு இயக்கத்தின் கொடியை மாநில கூட்டுறவுப் பதிவாளர் பி. எம். பெல்லியப்பா ஏற்றிவைத்தார்.

வங்கிப் பெருந் தலைவர் சு. ப. தங்கவேலன் வரவேற்புரை ஆற்றினார்.

வங்கிச் செயலாளர் சோ. சிவராஜன் பொன் விழா அறிக்கையை வாசித்தார்.

விழாவுக்கு தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமைதாங்கினார்.

நடப்பு ஆண்டில் ஏற்பட்ட கேட்பு தொகை முழுவதையும் வசூல் செய்து முடித்த நல்லமநாயக்கன்பட்டி மேற்பார்வைக் கழகத்திற்கு தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், கேடயம் வழங்கினார்.

படத் திறப்பு விழா

விழாவில் அண்ணல் காந்தியடிகளின படத்தை மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் ஆர். கனகசபை திறந்துவைத்தார்.

பேரறிஞர் அண்ணா படத்தை எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.-யும், முதல்வர் கலைஞர் படத்தை சட்டப் பேரவைத் துணைத் தலைவர் பெ. சீனிவாசனும் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர்.

மதுரைப் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார், முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் கே. சந்திரசூடன், மதுரை மாவட்

(4-ம் பக்கம் பார்க்க)

குடிசை இழந்த 138 தாழ்த்தப்பட்டோருக்கு உதவி

நல்ல வீடுகள் கட்டிக்கொள்ள ரூ. 1,000 வட்டியில்லா தவணைக் கடன்

மதுரை, அக். 30—

'மதுரையில் பெய்த பெருமழையால் 138 தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடு இழந்து தவிக்கிறார்கள்; அவர்களுக்குக் கடன் தொகை தந்தால் நல்ல வீடுகளாகக் கட்டிக்கொள்வார்கள் -- என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார்.

'138 தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளை முன்பிருந்த வீடுகள் போல் அல்லாமல் நல்ல வீடுகளாகக் கட்டிக்கொள்வதற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் வட்டியில்லாத கடனாகப் பத்தாண்டுக் காலத் தவணையில் ரூ 1,000 அரசின் சார்பில் அளிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்."

--முதலமைச்சர் கலைஞர்

(மதுரை விழாவில்)

ஜம்மு பகுதியிலிருந்து தாக்குதல் நடத்த திட்டம்

பனி மூட்டம் பாதகமாக உள்ளதாம்

ஸ்ரீநகர், அக். 30—

ஜம்மு பகுதியில் அமைந்துள்ள அனைத்து நாட்டு எல்லைக்கு மறுபுறத்தில் பாகிஸ்தான் இராணுவம் மிகுந்த கவனம் செலுத்தி வருவதைப் பார்த்தால் பத்தான்கோட் -- ஜம்மு -- ஸ்ரீநகர் பாதையைத் துண்டிக்கப் பாகிஸ்தான் திட்டமிட்டு வருவதாகத் தெரியவருகிறது. 1965-லும் பாகிஸ்தான் இதுபோலவே செயல்பட்டது.

ஆனால், பாகிஸ்தானின் எந்தச் சவாலையும் சமாளிக்க இந்திய இராணுவம் தயாராகவே இருந்துவருகிறது.

காஷ்மீர் பள்ளத்தாக்கிலும் மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் பாரசூட் மூலம் கையாட்களை இறக்கிவிடப் பாகிஸ்தான் திட்டமிட்டிருக்கிறது; ஏனெனில், தரை மார்க்கமாக அனுப்பி வைக்கப்படுவது உசிதமல்ல என்று பாகிஸ்தான் கருதுகிறது; இதனையும் இந்திய இராணுவம் கவனித்துவருகிறது.

மலைப் பகுதிகளில் பனிமூட்டம் அதிகமாக இருப்பதால், இப்பகுதியில் ஒரு தாக்குதல் நடத்தப் பாகிஸ்தான் மிகவும் யோசனை செய்யக்கூடும் என்றும் தெரிகிறது.

ஊதியத்தை மிஞ்சும் மருத்துவச் செலவு

அஞ்சல்-தந்தி ஊழியர் கோரிக்கை: அரசு திகைப்பு

புதுடில்லி, அக். 30—

இந்திய அஞ்சல்--தந்தித் துறை அமைச்சகம், அஞ்சல்-தந்தி ஊழியர்களின் மருத்துவச் செலவுக் கோரிக்கைகளைப் பார்த்துத் திணறிவருவதாகக் கூறப்படுகிறது.

1970—71-ம் ஆண்டில் வந்திருக்கும் மருத்துவச் செலவுக் கோரிக்கையின் அளவு ரூ. 5.30 கோடியாகும் என்று தெரியவருகிறது.

மாதம் ரூ. 200 கூடச் சம்பளம் வாங்காத ஓர் ஊழியர் ஆயிரக்கணக்கான ரூபாய் மருத்துவச் செலவுக்கு வாங்கிய நிகழ்ச்சிகூட ஏற்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போதைய விதிகளின்படி, இந்தக் கோரிக்கைகள் முறையாக அனுப்பப்பட்டிருந்தால் அதைத் தருவதைத் தவிர வேறு வழியில்லையாம்.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக, நாடெங்கிலும் பரவலாக மருந்தகங்களைத் திறப்பது குறித்து அஞ்சல்-தந்தித் துறை பரிசீலித்துவருகிறது. இதன் முதற்படியாக ஆந்திரத்தில் 4 மருந்தகங்கள் திறக்கப்படும்.

இப்போது அஞ்சல்-தந்தித் துறைக்கு நாடெங்கிலும் 18 மருந்தகங்கள் இருக்கின்றன; இவை தேவைக்குப் போதுமானவையல்லவாம்.

இதற்குத் தேவையான ஊழியர்களை நியமித்துக்கொள்ள அஞ்சல்-தந்தி வட்டாரத் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

தொழில் துவக்கக் கடனுதவி

மாவட்டந்தோறும் குழு

மதுரை, அக். 30—

தொழில்கள் துவக்க முன்வருபவர்களுக்கு ரூ 25,000 வரை கடன் வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு அமைக்க மாநில அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

மதுரை மாவட்டக் கலெக்டர் இலட்சுமிகாந்தன் பாரதி இத்தகவலைக் கூறினார்.

தொழில் அதிபர்கள் அரசாங்கக் கடன்கள் பெறுவதில் ஏற்பட்டுவந்த காலதாமதத்தைப் போக்க இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

இதுவரை தொழில்துறை உதவி இயக்குநர் இக்கடன்களை அளித்து வந்தார்.

47 மீனவர்களைக் காணோம்

அனைவரும் மாலத் தீவைச் சேர்ந்தவர்கள்

சென்னை, அக். 30—

அரபிக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற மாலத் தீவைச் சேர்ந்த 47 மீனவர்கள், கடந்த அக்டோபர் 15-லிருந்து காணப்படவில்லை.

இவர்களைக் கவனிக்கும்படி, கொழும்பு நோக்கிச் செல்லும் எல்லாக் கப்பல்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.
திருவள்ளுவராண்டு 2002 ஐப்பசி 13 (30—10—71) சனி

நீதியை நிலைநாட்டுவோம்!

இந்தியத் துணைக்கண்டத்தில் போர் மேகங்கள் சூழ்ந்து மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தில் போர் மூளுமோ என்ற அச்சம் உலக நாடுகளிலெல்லாம் நிலவிவருகிறது.

பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள போர் ஆயத்த ஏற்பாடுகள், எந்த நேரத்திலும் போர் மூளலாம் என்பதையே பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தில் தாக்குதல் ஏற்பட்டாலும் அதனைத் தடுத்துநிறுத்தும் ஏற்பாட்டினை இந்தியா செய்துகொண்டிருக்கிறது.

எதிரிகள் தாக்க முனைந்தால் அடுத்த விநாடியே எதிர்த்து விரட்டியடிக்கக்கூடிய வலிமை நமது படைக்கு உண்டு என்பதை, நமது பாதுகாப்பு அமைச்சரும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நமது படை வலிமையை எதிரியும் அறியாமல் இல்லை; அறிந்திருந்தும், போரையே விரும்பாத நம்மை வம்புக்கு இழுக்கப் பாகிஸ்தான் முற்படுகிறது என்றால், இதற்கு உள் காரணம் இல்லாமலிருக்க முடியாது.

வங்காள தேசச் சிக்கலில் பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் வசமாக மாட்டிக்கொண்டுவிட்டார். முன்வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது என்பதற்காக — வீம்புக்கு — இராணுவ தர்பார் நடத்திக்கொண்டிருக்கிறார்.

வங்காள தேச விவகாரத்தில் யாகியா கான் நடந்துகொண்ட விதம், ஜனநாயகம் விரும்பும் எந்த நாட்டுக்கும் மன நிறைவூட்டத்தக்கதன்று. ஜனநாயக விரோதமாக நடந்துகொண்டதோடு நில்லாமல், அநீதிக்குட்பட்ட மக்களையே பழி தீர்த்துக்கொள்ளும் நோக்குடன் இனக் கொலையில் ஈடுபட்டிருக்கும் அவர் மீது அனுதாபம் காட்ட எவரும் — எந்த நாடும் தயாராக இல்லை.

'உள்நாட்டுப் பிரச்சினை' என்ற போர்வையில், வங்காள தேச மக்கள் மீது அவர் ஏவிவிட்டுள்ள இராணுவத் தாக்குதலைக் கண்டு உலகமே வேதனை கொண்டிருக்கிறது. இராணுவக் கொடுமைக்கு அஞ்சி அகதிகளாக வெளியேறி வந்திருக்கும் ஒரு கோடி பேருக்கும் புகலிடமளித்ததன் மூலம் உலக நாடுகளின் அனுதாபத்தையெல்லாம் பெற்றுவிட்டது இந்தியா. இதைக் கண்டு மனம் பொறுக்காத பாகிஸ்தான் அதிபருக்கு, இந்தியா மீது ஆத்திரம் தாங்கவில்லை. இந்தியா மீது போர் தொடுக்க எல்லா ஆயத்தங்களையும் செய்துவருகிறார்.

வங்காள தேசப் பிரச்சினையால் பாகிஸ்தான் அரசு எந்த அளவுக்குப் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் செய்திகள் வாயிலாக அறிகிறோம். அதிபர் யாகியா கானின் செயலால் ஏற்பட்டுவிட்ட தொல்லைகளை, மேற்குப் பாகிஸ்தான் வாழ் மக்களும் உணரத் தொடங்கிவிட்டிருக்கின்றனர்.

பாகிஸ்தானில் பெரும் அந்நிய நாணயச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டுள்ளது; கையிருப்பெல்லாம் தீர்ந்துவிட்டதாம்; மேற்கொண்டு, தேவைக்கு அயல் நாடுகளில் கையேந்திக் கொண்டிருக்கிறது; இதுவரை உதவியளித்துவந்த நாடுகளும் இப்போது கைவிரித்துவிட்டனவாம்.

இந்த நிலையில், பாகிஸ்தானில் விலைவாசி ஏற்றம் — உற்பத்தியில் வீழ்ச்சி — பற்றுக்குறை — பஞ்சம் ஆகியவை ஏற்பட்டு அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்; இன்னும், 'போர்' என்று ஆரம்பித்தால், அந்த நாட்டு மக்கள் எந்த நிலைக்கு ஆளாவார்கள் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

இந்த நிலையிலும் போர் தொடுக்க யாகியா கான் துணிந்திருக்கிறார் என்றால் காரணம் என்ன? வங்காள தேசத்தை மனமுவந்து விட்டுவிடும் பெருந்தன்மை அவருக்கு இல்லை; 'துப்பாக்கி முனையில் பணியவைக்க முடியும்' என்ற நம்பிக்கையும் போய்விட்டது; யாரேனும் மூன்றாவது நாட்டைச் சேர்ந்தவர்கள் முன்வந்து, 'சமாதானம்' என்ற பெயரில் பரிகாரம் கண்டால்தான் முடியும் என்ற நிலை உருவாகிவிட்டிருக்கிறது; ஆனால், 'உள்நாட்டுப் பிரச்சினை' என்று கூறப்படுவதால், அதில் வேற்று நாடு ஒன்று தலையிடவும் முடியாத இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது.

எனவேதான், 'இந்தியாவுடன் போர்' என்று ஆரம்பித்தால், அதன் மூலம் பரிகாரம் கண்டுவிட முடியும் என யாகியா கான் நம்புகிறார்.

"இந்திய எல்லையில் வாலாட்டினால், இந்தியப் படை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்காது — திருப்பித் தாக்கும்; உடன் போர் மூளும்; போரை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட மற்ற நாடுகள் முன்வரக்கூடும்; அப்போது பேரங்கள் நடத்தி — வங்காள தேசப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம்" என்பது சர்வாதிகாரி யாகியா கானின் உள்நோக்கமாக இருக்கக்கூடும் — என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

உண்மை எதுவாக இருப்பினும், 'போரை, பாகிஸ்தான் விரும்புகிறது' என்பது வெளிப்படை; 'போரே கூடாது — இறுதி வரை பொறுமையாகவே இருந்து பார்க்கலாம்' என்பது இந்தியாவின் உறுதியான முடிவு; ஆனால், இதுவே இறுதியான முடிவாக ஆகிவிடாது; போரை பாகிஸ்தான் வலியத் திணிக்குமானால் இந்தியா களத்தில் இறங்கத் தயங்கப்போவதில்லை.

'போர் வேண்டாம்' என்பதற்காகத்தான் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள், இந்த நெருக்கடியான கட்டத்திலும் நாட்டைவிட்டு உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்; நமது பக்கம் இருக்கின்ற நியாயத்தை, தாம் செல்லுமிடங்களிலெல்லாம் அவர் எடுத்துரைத்து வருகிறார்; உலகப் பெரும் வல்லரசான அமெரிக்க அதிபரையும் சந்தித்து அவர், இங்குள்ள நிலையைத் தெளிவுபடுத்தத்தான் இருக்கிறார்.

சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள எந்த நாடும், இந்தியாவின் நிலை கண்டு அனுதாபம் காட்டாமல் இருக்க முடியாது; உண்மை நிலையை அறிந்த பின்பும் உலகம் கைகட்டிக்கொண்டு வாளாவிருந்துவிட முடியாது.

பாகிஸ்தான் சர்வாதிகாரியால் இந்தியா எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது — ஒரு கோடி பாகிஸ்தான் குடிமக்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டதன் மூலம் எவ்வளவு பெரிய சுமையைத் தாங்க நேரிட்டிருக்கிறது என்பதையெல்லாம் உலக நாடுகள் உணர்ந்து செயல்படும் என்றே நம்புகிறோம்.

இந்தியாவின் பொறுமையைச் சோதிக்கும்வகையிலும் — அதன் நல்லெண்ணத்தை மதிக்காமலும் பாகிஸ்தான், போரே தனது இறுதி முடிவு என்று முடிவு செய்யுமானால், அதற்கு நாம் ஆயத்தமாகிப் பல நாட்களாகிவிட்டன என்பதையும் உலகத்துக்கு அறிவித்துவிட்டிருக்கிறோம்.

நமது தலைமையமைச்சர் நாட்டில் இல்லாத நேரத்தில் பாகிஸ்தான் தனது கைவரிசையைக் காட்ட முனையுமானால், அதற்குச் சரியான பாடம் புகட்ட நமது முப்படைகளும் காத்துக்கொண்டிருக்கின்றன; படைவீரர்கட்குத் துணையாக நாட்டுமக்கள் ஒன்றுபட்டு அணி திரண்டு நிற்பது உறுதி.

இந்த நம்பிக்கையில்தான் தலைமையமைச்சர், நல்லெண்ணத் தூதுவராக — அமைதியின் காவலராக வெளிநாடு சென்றுள்ளார்; அவருடைய பயணம் வெற்றிப் பயணமாக முடியும் என்று நம்புகிறோம்.

அவர் தமது பயணத்தை இடையிலே நிறுத்திவிட்டு நாடு திரும்பவேண்டிய நிலை ஏற்படாது என்றே பெரிதும் நம்புகிறோம்; அப்படி ஒருவேளை — நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக நிலைமை ஏற்படுமானால், அதைப்பற்றி நாட்டுமக்கள் சிறிதும் அச்சங்கொள்ளத் தேவையில்லை; என்றைக்கேனும் ஒருநாள் இந்த அச்சுறுத்தலைச் சந்தித்தே தீரவேண்டியிருக்கும்; ஆனால், வெற்றி மட்டும் நம் பக்கம்தான் என்றும் இருக்கும்.

எனவே, நமது நாட்டு மக்கள், முந்திய போர்க் காலங்களிலெல்லாம் ஒன்றுபட்டு நின்று — அரசுக்குத் தோள் கொடுத்துப் பல தியாகங்களையும் வீரச் செயல்களையும் புரிந்ததுபோல், இந்த முறையும் தங்கள் பங்கினைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நெருக்கடி நிலையைச் சமாளிக்கும் வகையில் மத்திய அரசு விதித்துள்ள புதிய வரிகளையும் மக்கள் முணுமுணுக்காமலே ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நெருக்கடி தீர்ந்ததும் அந்த வரிகளும் நீங்கிவிடும் என்பதை மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

நாட்டைக் காக்கும் திருப்பணியில் — தமிழ்நாடு — இந்தியாவின் வேறு எந்த மாநிலத்துக்கும் பின்வாங்கியதல்ல என்பதை இந்த முறையும் நாம் மெய்ப்பித்துக் காட்டத்தான் போகிறோம்.

வலிச்சண்டைக்கு இழுக்கும் எதிரிக்குத் தக்க பாடம் புகட்டுவோம் — நீதியை நிலை நாட்டுவோம் என்ற சூளுரையை நாம் அனைவரும் மேற்கொள்வோமாக!

ரூ. 14 இலட்சம் செலவில் பிராட்வே பேருந்து நிலையம்

மாநகராட்சி திட்டத்துக்கு மாநில அரசு அனுமதி

நவீன வசதிகளுடன் கட்டி முடிக்கப்படும்

சென்னை, அக். 29—

சென்னை—பிராட்வேயில் நவீன வசதிகளைக் கொண்ட பேருந்து நிலையம் அமைக்கும் மாநகராட்சியின் திட்டத்துக்கு மாநில அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

120 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும் இந்தப் பேருந்து நிலையம், ரூ. 14 இலட்சம் செலவில் கட்டப்படும்.

ஒரே நேரத்தில் 36 பஸ்களை நிறுத்திவைக்க இங்கு வசதியிருக்கும்; இதற்காக, வரிசை ஒன்றில் 3 பஸ்கள் நிற்கும்வகையில் 12 வரிசைகள் கட்டப்படும்.

மற்றும் சிற்றுண்டிச் சாலை ஒன்றும், 21 கடைகளும் கட்டி வாடகைக்கு விடப்படும்.

பணிகள் இளைப்பாறுவதற்கான இட வசதியும், 22 அறைகள் கொண்ட விடுதி ஒன்றும் இங்கு கட்டப்படும்.

விரைவில் துவங்கவிருக்கும் இதன் வேலை ஓராண்டிற்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரகசியப் 'பைல்'கள் எரிக்கப்படுவதேன்?

பாகிஸ்தான் தூதரகத்தின் செயலுக்குக் காரணம்?

புதுடில்லி, அக். 30—

புதுடில்லி பாகிஸ்தான் தூதரகத்திலுள்ள எல்லா இரகசியப் 'பைல்'களும் எரிக்கப்பட்டுவருகிறதாம்!

பாகிஸ்தானின் 'போர் நூலில்' உள்ள உத்தரவுகளையொட்டி இந்தப் 'பைல்'கள் எரிக்கப்படுகின்றனவாம்!

குறுகியகால முன்னறிவிப்பின் மீது ஏராளமான ஊழியர்களைப் பாகிஸ்தான் தூதரகம் ஒரு மொத்தமாக மாற்றியிருப்பதை அடுத்து இங்குள்ள சான்றேடுகள் அழிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்நியச் செலாவணி நெருக்கடியால் பாகிஸ்தான் அவதி

அயல்நாட்டு உதவிகளும் மறுக்கப்பட்டு விட்டன

புதுடில்லி, அக். 29—

பாகிஸ்தானுக்கு உதவி அளித்து வரும் வெளிநாடுகள், 'இனி எவ்வித உதவியும் அளிக்க முடியாது' என்று மறுத்துவிட்டிருக்கின்றன.

"பாகிஸ்தானில் ஏற்பட்டுவரும் அரசியல் குழப்பங்கள் நீடிக்கும் வரையில், மேற்கொண்டு நிதி உதவி அளிக்க முடியாது" என்று அமைச்சர் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றனராம்.

பாகிஸ்தானிடமிருந்த அந்நியச் செலாவணி அனைத்தும் தீர்ந்துவிட்டனவாம்.

எனவே, உலக நாடுகளிடம் உதவி கேட்டுப் பாகிஸ்தான் அதிகாரிகள், ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்து வருகிறார்கள்.

சென்னை நகரப் பஸ் பயணிகளுக்கு

போலீசு கமிஷனர் எச்சரிக்கை

சென்னை, அக். 30—

"பஸ்களுக்காக நிற்கும் பயணிகள் அதற்கென்று போடப்பட்டுள்ள சிமெண்டுத் தடுப்புக்குள்ளேயே நிற்கவேண்டும்" என்று போலீஸ் கமிஷனர் ஷெனாய் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"பலர், சிமெண்டுத் தடுப்புக்கு வெளியிலும் — பஸ் வரும் பாதையிலும் — தடுப்புகள்மீது உட்கார்ந்துகொண்டும் இருக்கிறார்கள்; இதனால் பஸ்சுக்கும் — தடுப்புக்குமிடையில் சிக்கி நசுங்க ஏதுவாகும்; பொதுமக்கள் இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நடந்துகொள்ளாவிட்டால் போலீசு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும்" என்று கமிஷனர் எச்சரித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறி நடத்தப்படும் படுகொலை

உலக அமைதிக்கே வேட்டு வைக்கிறது பாகிஸ்தான்

ஐ. நா.-வில் இந்திய பிரதிநிதி குற்றச்சாட்டு

நியூயார்க், அக். 29—

ஐ. நா. பேரவையின் அரசியல் குழுக் கூட்டத்தில் பேசுகையில், இந்தியப் பிரதிநிதி சமர் சென், 'மனித உரிமைகளை மீறிப் பாகிஸ்தான் நடத்திவரும் பயங்கரப் படுகொலைகளை விசாரித்து — சமாதானத்துக்கு வேட்டு வைக்கும் வகையில் அது தொடர்ந்து நடந்துவருகிறது' என்று குற்றம் சாட்டினார். 'எதிர்ப்புத் தெரிவிப்பவர்களைக் கொன்று குவித்து வங்க தேசப் பிரச்சினைக்குத் தீர்வு காண யாகியா கான் முயற்சிக்கிறார்' என அவர் குற்றஞ்சாட்டினார்.

"கிழக்கு வங்க நிகழ்ச்சிகளை ஐ. நா. கவனிக்காமல் இருக்க முடியாது; அங்கு நடைபெறுபவை பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரம் — இந்தியாவும் உலகும் அக்கறை காட்டவேண்டிய பிரச்சினையல்ல' என்பது ஏற்க இயலாத வாதமாகும்" என்கிறார் அவர்.

அனைத்து நாட்டுப் பாதுகாப்பும் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் பாகிஸ்தான்மீது சாட்டிய குற்றச்சாட்டுகள் வருமாறு:—

"திட்டமிட்டுக் கொடூரமாக அடிப்படை உரிமைகளையும் — மனித உரிமைகளையும் பாகிஸ்தான் அழித்து, ஒழித்து வருகிறது; இதன்மூலம் 90 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களை இந்தியாவுக்குள் விரட்டி — அதன் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கு இடையூறு விளைவித்துள்ளது.

போரைத் தவக்குவதாக அச்சுறுத்தி — தன் கொடுமைகளைப் பற்றி வெளியுலகினர் கவனம் செலுத்த இயலாதபடி செய்வது அதன் திட்டமாகும்.

இந்தியாமீது பழி போடுவதெல்லாம், தன்பால் உலக நாடுகளின் அனுதாபத்தைப் பெறுவதற்கேயாகும்.

கிழக்கு வங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் அரசியல் உடன்பாடு காண்பதில் பாகிஸ்தான் தலைமையினர் அக்கறையே காட்டவில்லை.

கல்வியறிவு உள்ள அனைவரையும் கொலை வழி மூலம் தீர்த்துக்கட்டி — மற்றவர்களைப் பணிய வைப்பது பாகிஸ்தானின் நடைமுறையாகிவிட்டது.

அகதிகள் இந்தியாவிக்கு ஓயாது வந்து கொண்டிருக்கின்றனர்; ஆறு மாதங்களுக்கு மேலாக அவர்களைப் பராமரித்தாகிவிட்டது.

அவர்களைப் பாகிஸ்தான், அடித்து விரட்டியதுடன், போர் மிரட்டலின் மூலம் இந்தியாவையே மேலும் சிரமத்துக்கு உள்ளாக்கி வருகிறது.

அகதிகளை இந்தியாவுக்குள் விரட்டுவது, இந்தியாவின் விவகாரங்களில் குறுக்கிடுவதற்குச் சமம் அல்லவா?

இந்தியாவின் பிரதேச உரிமையைப் பாதிக்கும் வகையில் பாகிஸ்தான் துவக்கத்திலிருந்தே அச்சுறுத்தி வந்துள்ளது.

இரஷ்யாவுடன் இந்தியா செய்துகொண்ட ஒப்பந்தம் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வழி செய்து — ஆக்கிரமிப்பாளருக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

எல்லைகளிலிருந்து குறிப்பிட்ட தூரத்துக்கு இரு நாட்டுப் படைகளும் வெளியேற வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கை ஏற்க இயலாததாகும்.

பாகிஸ்தான் தன் படைகளை எல்லையில் குவித்த பிறகுதான் இந்தியா தன் படைகளைக் கொண்டுவந்தது; எனவே, திரும்பிச் செல்ல வேண்டியது பாகிஸ்தானின் படைகளேயாகும்."

கிழக்குவங்கத்தில் சீனக் கொரில்லா நிபுணர்கள்

பாகிஸ்தான் படைக்கும் பயிற்சி தருகின்றனர்

விடுதலை வீரர்களின் தாக்குதலை சமாளிக்க இயலாததால் ஏற்பட்ட விளைவின் எதிரொலி

புதுடில்லி, அக். 30—

வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் இராணுவத்தினருக்குக் 'கொரில்லாப் போர்ப் பயிற்சி அளிப்பதற்காக 200 சீனக் கொரில்லா நிபுணர்கள் வந்திருக்கின்றனர்.

சீன அதிகாரிகளை உடனடியாக அனுப்பி வைக்கும்படி, பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் சீனாவுக்கு வேண்டுகோள் விடுத்தார்; அதன்படி இந்த அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மைமன்சிங் பகுதியில் நடைபெறும் போரில் சுதந்தரப் படையின் கை ஓங்கிவருவதால், அவர்களைச் சமாளிப்பதற்காகவே சீனாவின் உதவியை யாகியா கான் நாடியிருக்கிறார்.

முந்திரிச் சாராயத் தொழிற்சாலை

தமிழ்நாட்டில் துவங்க முயற்சி

சென்னை, அக். 30—

தமிழ்நாட்டில் முந்திரிச் சாராயம் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை துவக்க அனுமதி கோரிச் சிலர் மனுச் செய்துகொண்டுள்ளனர். இதற்கு அனுமதி வழங்குவது குறித்து விரைவில் அரசு முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களின் பல பகுதிகளில் ஏராளமான முந்திரிச் சாகுபடி ஆகிறது.

முந்திரிப் பழத்திலிருந்து சாராயம் தயாரிப்புத் தொழிற்சாலை கோவாவில் உள்ளது.

'கோவை மாவட்டம்: பிளேக் அபாயம் நிலவும் பகுதி'

எலிகள் செத்து விழுவதன் விளைவு — அரசின் முன்னேற்பாடு நடவடிக்கை

விழிப்புடன் இருக்குமாறு டாக்டர்களுக்கு எச்சரிக்கை

சென்னை, அக். 30—

திருப்பூரிலும் — அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் பெரும் அளவில் எலிகள் செத்து விழுவதன் காரணமாக முன்னெச்சரிக்கையாகக் கோவை மாவட்டம் முழுவதையுமே பிளேக் அபாயம் நிலவும் மாவட்டமாகத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

நோய்த் தடுப்பு மருந்துகளை உடனடியாக அனுப்பிவைக்கும்படி பம்பாய் ஹாப்கின் நிலையத்துக்குத் தமிழக அரசு வேண்டுகோள் விடுத்தது.

பிளேக் நோயால் இதுவரை யாரும் பாதிக்கப்படவில்லையாயினும், செத்து விழுந்த எலிகளின் பிளேக் கிருமிகளின் அறிகுறிகள் இருந்ததாக துவக்கக் கட்டச் சோதனைகளிலிருந்து தெரியவந்தது.

முழுச் சோதனையும் முடிந்த பிறகுதான் அதன் தன்மை உறுதியாகத் தெரியவரும்; இதற்கு இன்னும் ஒரு வாரமாகும்; அதற்குள் முன்னேற்பாடாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கோவையில் நோய்த் தடுப்பு ஊசி குத்தும் வேலை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

விழிப்புடன் இருக்குமாறு டாக்டர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளாக பிளேக் நோயே ஏற்பட்டதில்லை.

தேர்தலில் புதுமுறை வாக்குச் சீட்டு

வாக்காளர் கையெழுத்திடவும் ஏற்பாடு

தலைமைத் தேர்தல் ஆணையர் வெளியிடும் தகவல்

புதடில்லி, அக். 30—

அடுத்த பிப்ரவரியில் மத்திய ஆட்சிப் பகுதிகள் உட்பட சுமார் 15 மாநிலங்களிலும் சட்டமன்றத் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன; இந்தத் தேர்தல்களில், புது மாதிரியான வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்துவதென்று தேர்தல் கமிஷன் முடிவு செய்திருக்கிறது.

இந்த வாக்குச் சீட்டுக்கள் அடிக்கட்டைகளுடன் (கவுண்டர் பாயில்) கூடியதாக இருக்கும்.

"புது மாதிரி வாக்குச் சீட்டுக்களின் அடிக் கட்டைகளில் அவற்றின் வரிசை எண்களுக்குப் பதிலாக, வாக்காளரின் வரிசை எண்ணும் — அவரது பெயர்ப் பதிவு செய்யப்பட்டுள்ள பட்டியல் பாகத்தின் எண்ணும் (பார்ட் நம்பர்) குறித்துக்கொள்ளப்படும்"

என்று தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா விளக்கினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அடிக் கட்டையில் வாக்காளரின் கையெழுத்தையோ, அவர் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தால் அவரது பெருவிரல் குறியையோ பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய வாக்குச் சீட்டின் 'மாதிரி'கள் எல்லா மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய தேர்தல் அதிகாரிகளின் மாநாடு ஒன்று டில்லியில் நவம்பர் 3, 4-ம் நாட்களில் நடைபெறுகிறது; அப்போது இந்தப் புதிய வாக்குச் சீட்டுக்கள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படும்.

நம் நாட்டில் இம்மாதிரி மாநாடு நடப்பது இதுவே முதல் தடவையாகும்.

தேர்தல்கள் நடத்துவது சம்பந்தமான நடைமுறைகளைச் செம்மையுறத் திருத்தியமைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும்."

இரயில்வே ஆலோசனைக் குழுவில் ஆர். பி. உலகநம்பி

சென்னை, அக். 29—

தென் பகுதி இரயில்வேயின் பயணிகள் ஆலோசனைக் குழு உறுப்பினராக நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. ஆர். பி. உலகநம்பி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கேரள அரசின் அதிகாரி கூற்று — தமிழ்நாடு அரசு மறுப்பு

சென்னை, அக். 30—

"முன்னறிவிப்பு ஏதுமின்றி ஆளியாறு அணையைத் தமிழ்நாடு திறக்கக்கூடும் — என்று கேரள அரசு அதிகாரி தெரிவித்துள்ள அச்சம் ஆதாரமற்றதாகும்"

எனக் கூறி, தமிழ்நாடு அரசு நிராகரித்திருக்கிறது.

இருட்டடிப்பு ஒத்திகைகள்

மூன்று நகரங்களில் நடைபெற்றன

புதடில்லி, அக். 30—

எல்லைப்புற நெருக்கடியையொட்டி டில்லியிலும் — சுற்றிலும் உள்ள 40 மைல் வட்டாரத்தில் வட்டாரத்தில் ஒரு மணி நேர இருட்டடிப்பு ஒத்திகையும் — முப்படைத் தாக்குதல் ஒத்திகையும் சேர்ந்தாற்போல் நடத்தப்படுகிறது.

இந்த ஒத்திகைகள், தனி முக்கியத்துவம் பெறுகின்றன.

இரு நிமிட எச்சரிக்கைச் சங்கு ஒலித்ததும், வண்டிகள் நின்றுவிடும் — பாதசாரிகள் — பக்கத்திலுள்ள பதுங்கும் இடங்களுக்குச் சென்றுவிடுவர்; விமான நிலையம் இருளில் மூழ்கிவிடும்.

கல்கத்தாவில் :

நகரின் பல்வேறு பகுதிகளில் மூன்று நாட்களுக்கு இருட்டடிப்பு ஒத்திகை நடைபெறும்.

நேற்று, விமானத் தாக்குதல் அபாயச் சங்கு — ஒத்திகைக்காக ஒலித்தது; 15 நிமிடங்களுக்குப்பிறகு அபாயம் நீங்கியதாக அறிவிக்கப்பட்டது.

பம்பாயில் :

இருட்டடிப்பு ஒத்திகைக்காக நேற்று பம்பாய் நகரம் தயாராக இருந்தது; பாதி இருளில் நகர் மூழ்கிக் கிடந்தது; மங்கலான வெளிச்சத்தில் பஸ்கள் — கார்கள் — இதர வாகனங்கள் ஓடின; அபாயச் சங்குகள் ஒலித்ததும் மங்கலான வெளிச்சமும் மறைந்துவிட்டது.



இந்திய அரசுக் கட்டடங்களுக்கும் மாநகராட்சி வரி

சட்டம் இயற்ற சென்னை மேயர் சா. கணேசன் வற்புறுத்தல்

அனைத்திந்திய மேயர்கள் மாநாட்டில் பேச்சு

பம்பாய், அக். 29—

"மாநகராட்சிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு மத்திய அரசும் — மாநில அரசுகளும் அனுமதி வழங்கவேண்டும்.

"ஒரு சில வரிகளை விதிப்பதற்கும் — மேல் வரி விதிப்பதற்கும் மாநகராட்சிகளுக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் குறைக்கக் கூடாது.

"பெரிய நகரங்களில் உள்ள மத்திய அரசின் கட்டடங்கள், இரயில்வே கட்டடங்கள் ஆகியவற்றுக்குத் தனியார் கட்டடங்களைப்போல வரி விதிப்பதற்கு மாநகராட்சிகளை அனுமதிக்க வேண்டும்; இதற்கேற்ற வகையில் மத்திய அரசு ஒரு சட்டம் இயற்ற வேண்டும்"

என்று, அனைத்திந்திய மேயர்கள் சங்கத்தின் தலைவரான சென்னை மேயர் சா. கணேசன் வலியுறுத்தினர்.

பம்பாயில், அனைத்திந்திய மேயர்கள் 16-வது மாநாடு நடைபெற்றது; 19 மேயர்கள் — 10 துணை மேயர்கள் — 20 மாநகராட்சி ஆணையர்கள் — 6 நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தலைமையுரையில், மேயர் சா. கணேசன் கூறியதாவது:—

"மாநகரின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கும் வசதிகளை அளிக்கவேண்டும் என்று மாநகராட்சிகள் விரும்புகின்றன; ஆனால், போதிய நிதி வசதி இல்லாததால், வளர்ந்து வரும் மக்களின் தேவைகளை அவற்றால் சமாளிக்க இயலவில்லை.

தங்களது தற்போதைய வருவாய்களைப் பெருக்கிக் கொள்வதற்கும்—புதிய வருவாய்க்கு வழி தேடவும் அனுமதிக்குமாறு மத்திய — மாநில அரசுகளை மாநகராட்சிகள் கேட்டுக்கொண்டு வருகின்றன.

சில வரிகளை விதிக்கும் பிரச்சினையில், 'மாநகராட்சிகளின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவேண்டாம்' என்று, மத்திய — மாநில அரசுகளை நாங்கள் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

நகராட்சி வரி விதிப்பதற்கு வகை செய்ய மத்திய அரசாங்கக் கட்டடங்களையும், இரயில்வே கட்டடங்களையும் மதிப்பீடு செய்வதற்கு மத்திய அரசு விரைவில் சட்டமியற்றும் என்று நம்புகிறேன்."

குடிசைப் பகுதிகள் முளைப்பதேன்?

மாராட்டிர ஆளுநர் கருத்தறிவிப்பு

"பெரிய நகரங்களுக்குள் மக்கள் வந்து குவிவதை ஒழுங்குபடுத்த — அவசியமாகும் — அரசியல் சட்டத் திருத்தம் ஒன்றை நிறைவேற்றலாம்.

"மக்கள் வந்து குவிவதால், பெரிய நகரங்களில் மக்கள் தொகைப் பிரச்சினையைக் கட்டுப்படுத்துவது சிரமமாகிறது; இதன்விளைவாக, மேலும் மேலும் குடிசைப் பகுதிகள் முளைக்கின்றன"

என்று, மேயர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசுகையில், மாராட்டிர ஆளுநர் அலி யாவர் ஜங் சுட்டிக்காட்டினர்.

நகராட்சிகளின் பொறுப்புக்கள் அதிகரிப்பதேன்?

மாராட்டிர முதலமைச்சர் விளக்க உரை

"மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதில் நகராட்சிகள் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும்.

"வடிகால் — மின்சாரம் — தண்ணீர் வழங்குதல் போன்ற வசதிகளை, தங்களுக்குக் கிடைக்கும் நிதி வசதிகளிலிருந்து மாநில அரசுகள் ஒதுக்குவது இயலக்கூடியதன்று; கூடுதல் நிதி வசதிகளைத் திரட்ட நகராட்சி நிர்வாகங்கள் வழிகாண வேண்டும்.

"கிராமப்புறங்களிலிருந்து மக்கள் வந்து குவிவதால், நகரங்கள் மாநகரங்களாகவும், மாநகரங்கள் பெருநகரங்களாகவும் ஆகிவிடுகின்றன; இதனால், நகராட்சிகளின் பொறுப்புக்கள் அதிகமாகி இருக்கின்றன"

என்று மாநாட்டின் துவக்க நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில், மாராட்டிர முதல்வர் வி. பி. நாயக் குறிப்பிட்டார்.

செலவைச் சமாளிக்க மானிய உதவி

மத்திய — மாநில அரசுகளுக்கு மேயர்கள் கோரிக்கை

தொடக்கக் கல்விக்காக மாநகராட்சிகளுக்கு ஏற்படும் செலவைச் சமாளிக்கு பொருட்டு 100 சதவிகித மானிய உதவி அளிக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்வதென அனைத்திந்திய மேயர்கள் மாநாடு முடிவுசெய்தது.

மாநகராட்சி ஊழியர்களுக்குக் கிராக்கிப் படி அளிப்பதால் ஏற்படும் கூடுதல் செலவைச் சமாளிக்க மாநகராட்சிகளுக்குத் தனி மானிய உதவி வழங்குமாறு மாநாடு மற்றொரு தீர்மானத்தின் மூலம் மத்திய அரசை வற்புறுத்தியது.

இரு தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1972-73-ம் ஆண்டில் அகில இந்திய மேயர்கள் குழுவுக்குக் கல்கத்தா மேயர் தலைவராகவும், பரோடா மேயர் துணைத் தலைவராகவும் இருப்பார்கள்.

நிர்வாகக் குழுவுக்கு மதுரை மேயர் எஸ். முத்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடும் புயலையும் சமாளிக்கும் சாதனம்

ஒலிபரப்பு தடைபடாமலிருக்கப் பாதுகாப்பு

இலண்டன், அக். 25—

பெரும் புயல் வீசும் காலங்களில், கூடவே தகவல் தொடர்பு துண்டிப்பு — வானொலி ஒலிபரப்பில் இடையூறு ஆகிய தொல்லைகளும் ஏற்படுவதுண்டு; அதிலும் குறிப்பாக வானொலி ஒலிபரப்புக்கள் இடையூறுவது மிகவும் தொல்லையான சூழ்நிலை என்பதனால், புயலிலிருந்து இதனைப் பாதுகாக்கும் ஒரு சாதனத்தைப் பிரிட்டனில் தயாரித்திருக்கிறார்கள்.

புயல் வேகம் ஒலிபரப்பு ஏரியல்களைத் தாக்கி வலிவிழக்கச் செய்வதால்தான் இந்தக் கோளாறு; புயல் இந்த ஏரியலைத் தாக்காமல் தடுக்கவும் — அப்படியே தாக்கினாலும் அதன் வேகத்தைத் தானே இழுத்துக்கொண்டு ஏரியலைப் பாதுகாக்கவும்கூடியது புதிய சாதனம்.

ஒலிபரப்பு ஏரியலுடன் இந்தச் சாதனத்தை இணைத்துவிட்டால், பிறகு எவ்வளவு கடுமையான புயல் வீசினாலும் அதன் வேகத்தைத் தானே ஏற்று — ஏரியலைப் பாதுகாத்து — ஒலிபரப்பில் கோளாறு ஏற்படாமல் செய்கிறது இந்தச் சாதனம்.

மக்களை மதித்து ஆண்ட மாமன்னன் இராசராசன்

தமிழ்ப் பண்பை உலக முழுதும் பரப்பி வாழ்ந்தான்

தஞ்சை இராசராசன் விழாவில் நீதிபதி கோகுலகிருஷ்ணன் கருத்துரை

தஞ்சை, அக். 30—

"தமிழ்நாட்டில் தமிழ்ப் பண்பாட்டைப் பரபபியவன் இராச இராச சோழன்; மக்களை மதித்து வாழ்ந்து வந்தான்; பிற மதங்களைக் குறைவாக நினைத்தது இல்லை.

"'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கையை மதித்து அரசாட்சி செய்துவந்ததனால், இராச இராசன் உலகத்திற்கே நாகரிகத்தைத் தந்தான்.

"மாற்றாரை மதிக்கும் மனப்பாங்கு இராச இராச சோழனுக்கு இருந்தது.

"'தென்னாடுடைய சிவனே போற்றி -- என்னாட்டவருக் இறைவா போற்றி; 'அன்பே சிவம் -- சிவமே அன்பு' என்ற தத்துவத்தை எடுத்துச் சொன்னது சைவம்; இந்தத் திருவாக்கை உலக முழுவதும் பரப்பியவன் இராச இராசன்.

"நாட்டு மக்கள்மீது நம்பிக்கை வைத்தான் இராச இராசன்; மக்களும் அவன்மீது நம்பிக்கை வைத்ததால் தான், அவனால் மாபெரும் மன்னனாக இருக்க முடிந்தது"

என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். கோகுலகிருஷ்ணன் அவர்கள், இராச ராசன் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

தஞ்சையில் இராச இராச சோழன் பிறந்த நாள் (சதய)விழா, நேற்று தஞ்சையில் தொடங்கியது.

மன்னை நாராயணசாமி எம்.எல்.சி. அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்.

விழாவையொட்டி காலை 10 மணிக்கு, தேவாரம் -- திருவாசகம் ஆகிய திருமறைகளை யானைமீது வைத்து முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள்.

மாலையில் விழாப் பொதுக்கூட்டம் நடந்தது.

தஞ்சைக்கோவில் இலாகா உதவிக் கமிஷனர் கோதண்டபாணி அனைவரையும் வரவேற்றார்.

கோவில் நிர்வாக தர்மகர்த்தா இராசாராம் இராசா சாகிப் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

விழாவை மேலவை உறுப்பினரும், தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளருமான மன்னை நாராயணசாமி தொடங்கிவைத்துப் பேசினார்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கோகுலகிருஷ்ணன் தலைமைதாங்கினார்.

விழாவையொட்டி தயாரிக்கப்பட்ட சிறப்பு மலரை தமிழ்நாடு பெரிய கோவில் அதிகாரி கே. எஸ். நரசிம்மன் வெளியிட்டார்.

கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தஞ்சை மாவட்ட நீதிபதி குப்பண்ணன் பரிசுகளை வழங்கினார்.

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், கோவிந்தராச நாட்டார் ஆகியோர் பேசினர்.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அக். 31 காலை 10 மணி: ஆற்காடு -- ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 11-மணி: நந்தியாலம்—பள்ளிக் கட்டடத் திறப்பு; 11-45 மணி: சாத்தூர்—பள்ளிக் கட்டடத் திறப்பு; பிற்பகல் 12-30 மணி: பெருங்கால்மேடு—பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 4 மணி: இராணிப்பேட்டை — பாரி கம்பெனித் தொழிலாளர் சங்க வெள்ளி விழாவில் கலந்துகொள்ளல்; 5-மணி: வேலம்— ஊராட்சி வரவேற்பு; 6-மணி: வேலம்— மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர் -- துணைத் தலைவர் பாராட்டுவிழா; இரவு 7-மணி: வேலம் பொதுமக்கள் வரவேற்பு.

முதல்வர் கலைஞர், சி.பா. ஆதித்தனார், செ.மாதவன் உரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டக் கூட்டுறவு வங்கித் தலைவர் பி. எஸ். மணியம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

வங்கியின் துணைப் பெருந் தலைவர் நா. சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

அமைச்சர் சி. பா. ஆதித்தனார்

கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கீழ்மட்டத்தில் இருக்கும் ஏழைகளுக்கு பயன் கிட்டும் வகையில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, பெட்டிக் கடைக்காரர்கள்--தேநீர்க் கடை --சலவைச்சாலை போன்றவைகளை வைத்திருப்போருக்கும் கடன் கிடைக்கும்.

இப்படிப்பட்ட கடன் கோரிக்கைகளைக் கவனிப்பதற்காக, ஒவ்வொரு பாங்கியிலும் தனிப்பிரிவுகளை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது."

அமைச்சர் செ. மாதவன்

தொழில் அமைச்சர் செ. மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தொழில்களுக்கு உதவி செய்வதற்கு என்றே கூட்டுறவு பாங்கிகள் இருப்பது தமிழகத்தில் மட்டுமேயாகும்.

தொழில் துறை வளர்ச்சியும் -- வேளாண்மைத் துறை வளர்ச்சியும் இணைந்து செல்ல வேண்டும் என்பதில் தமிழக அரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது; இதன் மூலமாகத்தான் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்."

முதல்வர் கலைஞர்

மதுரையிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் பொன்விழாக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையாவது:—

"கூட்டுறவு ஒரு நாட்டிலே வளர்ந்தால்தான், அந்த நாட்டின் சமுதாயம் தானும் தன்னை வளர்த்துக் கொண்டு -- நாட்டின் எதிர்காலத்தையும் ஒளி பொருந்தியதாக ஆக்க முடியும் என்பது அனுபவரீதியாக நாம் அறிந்த ஒன்றாகும்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் அரசானாலும் அல்லது அந்த நிறுவனங்களானாலும் செய்கின்ற தொண்டு கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாதாரண ஏழை எளிய மக்களை -- விவசாயப் பெருங்குடி மக்களைச் சென்று அடையக்கூடியதாக -- அவர்களுடைய வாழ்வைத் தொடத்தக்கதாக அமைந்திட வேண்டும் என்பதுதான் நமது ஆசையாகும்.

அந்த ஆசையை, கடந்த காலத்திலே நாம் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்.

அது முழுமையாக நிறைவேற வேண்டும் என்பதால், சாதாரண மக்களுக்கு -- சாமானிய மக்களுக்கு -- ஏழை எளிய கிராமப்புறத்து மக்களுக்கு இந்தப் பயன் முழுமையாகக் கிடைக்கவேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான் கூட்டுறவுச் சட்டங்கள் திருத்தங்கள் பெற்று -- இன்றைக்கு யாரோ சிலரது ஏகபோகச் சொத்தாக இருந்த இந்த நிறுவனங்கள் அவர்கள் கைப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு -- சாதாரண மக்கள் பிரதிநிதிகளாய் அமர்ந்திருக்கின்ற நிறுவனங்கள் தமிழகத்திலே உருவாகியிருக்கின்ற நல்ல நிலையை நாம் காண்கிறோம்.

கூட்டுறவு வங்கி என்பது, யாரோ ஊரில் இருக்கின்ற நான்கு பெரிய மனிதர்கள் -- ஏற்கனவே இருக்கின்ற அவர்களுக்கு கௌரவத்தின்மீது -- 'கூட்டுறவு நிறுவனத்தில் அவர்கள் புதிய உறுப்பினர்களாக இருக்கிறார்கள்' என்கின்ற ஒரு புதிய மெருகும் பூசப்படவேண்டும் என்கின்ற வகையிலே இந்தக் கூட்டுறவு இயக்கங்கள் பணியாற்றினால், 'ஊரிலே இருக்கின்ற பத்துப் பெரிய மனிதர்களுக்குக் கௌரவமான இடம் இது' என்று கூறத்தக்க அளவுக்குத்தான் இது அமையுமேயல்லாமல், அரசு விரும்புகின்ற அல்லது இந்தக் கூட்டுறவுத் துறைக்கு இன்றியமையாது இருக்கின்ற -- 'ஏழை எளிய மக்கள் வாழ்வில் பின்னப்பட்டிருக்கின்ற பல்வேறு சம்பவங்களுக்கு உதவி செய்தாக வேண்டும்' என்கிற அரிய இலட்சியங்களிலிருந்து விடுபட்டவர்களாக ஆகிவிடுவோம்!

இதை மையமாக வைத்துத்தான், இந்த வங்கிகளை இந்தக் கூட்டுறவு இயக்கத்தை இயக்குகின்ற பொறுப்பை ஆங்காங்கிருக்கின்ற ஆர்வம் படைத்த நண்பர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த இயக்கத்தினுடைய புனிதத்தைக் காப்பாற்றுகின்ற வகையில் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்ற அத்துணை பேரும் -- கடன் கொடுப்பவர்களும் நாணயமாக இருக்க வேண்டும்; கடன் வாங்கியவர்களும் நாணயமாக இருக்க வேண்டும்.

ஆகவே, நாணயம் என்பதை இரண்டு பக்கத்திலும் காட்டப்பட்டால்தான் கூட்டுறவு இயக்கம் ஒழுங்காக வளர முடியும்.

முன்பு சொல்வார்கள் -- 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று; இன்றைக்கு அந்தப் பாட்டு அப்படியே மாறி, 'கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்ல வேண்டிய அளவுக்கு நிலைமை மாறி வருகிறது!

ஆகவேதான், கூட்டுறவு இயக்கம் என்று கூறுவது அதை நிர்வகிக்கின்ற தலைவரை மாத்திரம் அல்ல -- செயலாளரை, அலுவலாளரை மாத்திரம் அல்ல -- கடன் வாங்குவோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன் -- அனைவரும் நாணயத்தோடு நடந்துகொள்ள வேண்டும்."

செங்கற்பட்டு மாவட்டத்தில்

20,000 தாழ்த்தப்பட்டோருக்கு நிலப்பட்டா வழங்கத் திட்டம்

மொத்த மதிப்பு ரூ. 20 இலட்சமாகும்

பூண்டி, அக். 30—

மக்கள் குறைகளை அறியும் திட்டத்தின்கீழ் செங்கற்பட்டு மாவட்டம் பூண்டியில், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சீத்தாராமதாஸ், நேற்று பொது மக்களைச் சந்தித்தார்; அதுபோது அவர் கூறியதாவது:—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் 20,000 தாழ்த்தப்பட்டோருக்கு 3 செண்ட் வீதம் நிலம் வழங்கத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; அரசிடமிருந்து அனுமதி கிடைத்ததும், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இதற்கான நிலப் பட்டாக்கள் வழங்கப்படும்; இந்த நிலங்களின் மொத்த மதிப்பு ரூ 20 இலட்சமாகும்.

"இந்த மாவட்டத்தில் இதுவரையில் 50,000 ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது; இன்றையத் தினம் 500-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு நிலப் பட்டா வழங்கப்படுகிறது."

விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 2,000 மனுக்கள் தரப்பட்டன; 'நியாயமான மனுக்கள் மீது உடனடியாகத் தீர்வு காணப்படும்' என்று அவர் உறுதியளித்தார்.

நிலமில்லாதவர்களுக்கு 500 பட்டாக்களையும், 20 பேருக்கு முதியோர் பென்ஷன் தொகையையும் அளித்தார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் சுப்புரத்தினம் அனைவரையும் வரவேற்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திருவள்ளூர் துரைராசு, கடம்பத்தூர் ஏ. பரந்தாமன் ஆகியோர் பேசினர்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகக் கலெக்டரிடம் ரூ. 6,800 தரப்பட்டது.

நெய்வேலி தொழிலாளருக்கு மழைக் கோட்டு

பதவி உயர்வு -- அலவன்சு பற்றி உடன்பாடு

நெய்வேலி, அக். 30—

நெய்வேலி நிலக் கரிச் சுரங்கத் தொழிலாளர்கட்குப் பதவி உயர்வு -- அலவன்சுகள் கொடுப்பது பற்றித் தொழிற் சங்கத் தலைவர்கட்கும் -- நிர்வாகத்தினருக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தொழிலாளர் தரப்பில் நெய்வேலித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சிறப்புத் தலைவர் சி. டி. தண்டபாணி எம்.பி, சிறப்புச் செயலாளர் ஏ. வி. தண்டபாணி (கடலூர் வட்ட தி.மு.க. செயலாளர்), சங்கத் தலைவர் துரை கதிரேசன், பொதுச்செயலாளர் ச. ஆண்டகுருநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த 11,000 தொழிலாளர்கட்கு விரைவில் மழைக்கோட்டு கொடுக்க நிர்வாகம் ஒப்புதல் தெரிவித்தது.

வர்த்தகப் பஸ்களில் பணியாற்றும் டிரைவர்கள்—கண்டக்டர்கள் பரிசோதகர்கள் ஆகியோர் தற்போது கிடைக்கும் அலவன்சுடன் நாள் ஒன்றுக்கு 75 காசுகள் கூடுதலாகப் பெறுவார்கள்.

இரண்டாம் நிலை டிரைவர்கட்கு இதுவரையில், 'ஓவர் டைம்' ஊதியம் $1\frac{1}{2}$ பங்கு என்று இருந்தது; இனி 2 பங்கு என்று உயர்த்தப்படும்.

பதவி உயர்வு பற்றியும் உடன்பாடு ஏற்பட்டது.

வட திரிபுராவில் எதிரிகள் வாலட்டம்

அகர்தலா, அக். 30—

வட திரிபுராவின் நகரான கமல்பூர்மீது பாகிஸ்தான் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 15 நாட்களாகவே பாகிஸ்தான படைகள் இப்படிச செய்துவருகின்றன.

எதிரிகளுக்கு இந்தியப் படைகள் பதிலடி கொடுத்துவருகின்றன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

31--10--71

சென்னை 1-வது வட்டம்

எம். ஜி. ஆர். நற்பணி மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு: இராயபுரம் --- சூரியநாராயண செட்டித் தெரு 'அறிவகம்' அருகில்; தலைவர்: சே. அரசு; கொடியேற்றுபவர்: மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.; பேசுவோர்: மு. வேதாசலம் எம்.எல்.ஏ., இரா. மு. மனோகரன் எம்.சி., கு. இராமலிங்கம், பூ. நாகலிங்கம், மு. பாண்டியன், மற்றும் பலர்.

1--11--71

பெங்களூர்

இருபதாவது வட்ட தி. மு. க. சார்பில் கன்னட மாநில விழா; மாலை 6 30 மணிக்கு; தலைவர்: மா. மனோகர்: பேசுவோர்: நடிகர் பி. எஸ். இரவிச்சந்திரன், ஜே. லிங்கையா, எஸ். என். நாராயணன், திவாரி எம்.சி., குட்புராஜ் எம்.சி., வெற்றித் திருமகன் நடிகர் இரவிச்சந்திரனுக்கு பெங்களூர் மேயர் லிங்கையா, 'கலை நிலவு' என்ற பட்டமளிப்பார்; இரவு நாடகம் உண்டு.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

அக். 31 மாலை மணி: இராணிப்பேட்டை—பாராட்டு விழா; 5. மணி: வேலம் ஊராட்சி மன்ற வரவேற்பு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.